**காலி மரபுரிமை மன்றம் - 2021**

---

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

காலி மரபுரிமை மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

காலி மரபுரிமை மன்றத்தின் நிதிக்கூற்றுக்கள், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, காலி மரபுரிமை மன்றத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது காலி மரபுரிமை மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

காலி மரபுரிமை மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், காலி மரபுரிமை மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மன்றத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பான அறிவினை பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மன்றத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளமை.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான “சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

**1.5.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 41(1) பிரிவு | கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்திற்காகவும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு தாபிக்கப்பட வேண்டிய போதிலும், காலி மரபுரிமை மன்றத்தினால் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்றினை நிறுவி நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்காக பின்வரும் உத்தியோகத்தர்களை கொண்ட குழுவொன்று 2021 ஏப்ரல் 21 ஆந் திகதி காலி மரபுரிமைகள் மன்றத்தின் பணிப்பாளர் மற்றும் தலைவருக்கு அனுப்பப்பட்ட உள்ளக கடிதத்தின் மூலம் முன்மொழியப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. | 2022 யூன் 30 ஆந் திகதி வரையிலும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் நடைமுறைப்படுத்தியிராமையால் குழு தாபிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் பெறுபேறு ரூபா 584,118 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகையானது ரூபா 55,286 ஆகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிப் பெறுபேற்றில் ரூபா 639,404 அல்லது 1157 சதவீதமான வீழ்ச்சியொன்றினை காண்பித்தது. மீளாய்வாண்டின் அரச மானியங்கள் ரூபா 891,348 இனால் குறைவடைந்தமை அந்த நிதிப் பெறுபேற்றிலான வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | காலி மரபுரிமை மன்றத்திற்கு அதிகளவான அதிகாரத்தை பெற்றுக்கொள்ள மற்றும் மன்றத்திற்கான வருமானம் ஈட்டத்தினை அதிகரித்தல் | 2018 ஆம் ஆண்டின் போது முன்னாள் அரசினால் காலி மரபுரிமைகள் மன்றத்திற்காக புதிய அதிகாரச்சட்டத்தினை தயாரிப்பதற்கு உரிய | அதிகாரச்சட்டத்தினை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆகிய நோக்கங்களுக்காக 1994 இன் 07 ஆம் இலக்க காலி மரபுரிமைகள் மன்ற அதிகாரச்சட்டத்தினை திருத்தியமைக்கும் தேவைப்பாடு இனங்காணப்பட்டு, அதற்காக 2015 ஆம் ஆண்டின் போது அமைச்சரவைப் பிரமாணக்குறிப்பு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த அதிகாரச்சட்டத்தில் திருத்தமொன்றை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அடிப்படைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன்போது தற்போதைய அதிகாரச்சட்டத்தை திருத்துவதற்கு எதிர்பார்த்திராததுடன், தெற்கு அபிவிருத்தி அமைச்சின் தலைமையில் “Southern Forts Authority Act” ஆக புதிய அதிகாரச்சட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.<br><br>புதிய முகாமைத்துவச் சபை அந்த மன்றத்தினை திருத்தியமைப்பதற்கும், அதற்காக புதிய முன்மொழிவுகளை தயாரிப்பதற்கும் 2022 பெப்ரவரி 21 ஆந் திகதி நடாத்தப்பட்ட முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டதுடன், அந்த முன்மொழிவுகளை அமைச்சிற்கு சமர்ப்பித்து அதிகாரச்சட்டத்தினை திருத்திமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | காலி கடவத் சத்தர பிரதேச செயலகத்திடமிருந்து காலி மரபுரிமை மன்றத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 1,036.5 மில்லியன் பெறுமதியான காணி மற்றும் ரூபா 3.825 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த கடட்டிடம் மாநகர சபை மற்றம் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் மூலோபாய நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் பிரதி செயற்திட்டப் பணிப்பாளருக்கு காலிக் கோட்டையை பாதுகாக்கும் செயற்திட்டத்தீன் ஒப்பந்த கம்பனிக்கு தற்காலிக இருப்பிடத்திற்காக கட்டிடம் ஒரு வருட காலத்திற்காக பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கி அதன் காலத்தை நீடிப்பு செய்து 02 ½ வருட காலத்தினுள் ஒப்பந்தக் கம்பனி அங்கு | 2021 ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் இதன் பாதுகாப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், திட்டங்களை அங்கீகரித்தல் தாமதமடைந்தமை, பொறியியல் மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் பெறுகை நடைமுறையின் தாமதங்கள் காரணமாக கட்டிடத்தின் பாதுகாப்பு அதுவரை தாமதமடைந்த போதிலும், தற்போது அதன் பாதுகாப்பு பணிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்ததாரரின் குத்தகைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வழங்கப்படும் மூலதன ஒதுக்கீடுகளில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| தங்கியிருந்த போதிலும், ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து குத்தகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, கட்டிடத்தினை பாதுகாப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் பாதீட்டு நிதியேற்பாடு ரூபா 7.85 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த கட்டிடத்தில் ஒப்பந்ததாரர்கள் தங்கியிருந்தமையால் அதன் பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ள மன்றத்தினால் முடியாதிருந்தது. | | |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் 12 செயற்திட்டங்களுக்காக ரூபா 25.8 மில்லியன் ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 17.55 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 12.05 மில்லியனான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்ட 04 செயற்திட்டங்களுக்காக ரூபா 1.22 மில்லியனான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டத்தை மேற்கொள்ளும் நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை. | பாதுகாப்பு திட்ட அங்கீகாரம் தாமதமடைதல், பொறியியல் மதிப்பீடுகளை தயாரிப்பதில் நிலவிய தாமதங்கள், பெறுகை நடைமுறை தாமதமடைந்தமை மற்றும் கொரோனா நிலைமையின் அடிப்படையில் அவ்வப்போது நாடு முடக்கப்பட்டமை காரணமாகும். | வழங்கப்படும் நிதியேற்பாடுகளில் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். நிர்மாணங்களுக்கு முன்னர் அதனை நிறைவேற்றும் இயலுமை தொடர்பில் ஆராய வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| காலி மரபுரிமை மன்றத்தினால் 2021 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம், ஆண்டிற்கான செயற்பாடுகளுக்காக மதிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் உள்ளபடியாக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினங்களிடையே கருத்திற்கொள்ளக்கூடிய அளவிலான விலகல் நிலவியதுடன், அந்த விலகலின் சதவீதம் 66 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலும் காணப்பட்டது. | பொலிஸ் உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்பு தாமதமடைதல், ஆரம்ப திட்டங்களை அங்கீகரிக்கும் பணிகள் கொரோனா தொற்றுநோய் காரணமாக பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைந்தமை முன்னர் திட்டமிட்டவாறு செயற்பட முடியாமை இதற்கு காரணமா அமையக்கூடும். | வரவு செலவுத் திட்டத்தினை தயாரிக்கும் போது நிலவும் வளங்களின் அடிப்படையில் மற்றும் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அடையக்கூடிய இலக்குகளின் அடிப்படையில் செயற்பட வேண்டும். |